செ.வெ.எண்:785 நாள்:23.09.2008

# செய்தி வெளியீடு

(23.9.2008)

தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சியின் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரது நடவடிக்கைகளும் சட்டப்படி அமையவில்லை என்றும்; பொது நலனுக்கு ஊறு விளைவிக்கும் விதமாக அமைந்துள்ளதென்றும் அரசின் கவனத்திற்கு தெரியவந்துள்ளதை அடுத்து, சின்னமனூர் நகர் மன்றத்திற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 41–ன் கீழ் நகர்மன்றத்தை ஏன் கலைக்கக்கூடாது என்று ஏழு நாட்களுக்குள் விளக்கம் கேட்டு அரசு கடிதம் அனுப்பியுள்ளது. உரிய விளக்கத்தைப் பெற்று தக்க நடவடிக்கை எடுக்க அரசு முடிவு செய்துள்ளது.

* * *

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9